9th November 1965]

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் புதுக்கோட்டை (உணவு உற்பத்தி) நிர்வாகப் பொறியாளரால் பரிசிலிக்கப்பட்டு வருகின்றது.

எம்பல் கண்மாய்

*365 கேள்வி—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

புதுக்கோட்டை பகுதியில் உள்ள ஆலங்குடி தாலுகா, வல்ல நாட்டு பிர்க்காவில் உள்ள 'எம்பல்' கண்மாய்க்குத் தண்ணீர் வரத்துவாரியாக எந்த எந்த வாரிகளில் இருந்து வரும் ?

கனம் திரு. பூ. கக்கன் : "எம்பல் கண்மாய்" வல்லநாடு ஏரியில் கீழும், கள்ளங்குடி ஏரியின் கீழும் உள்ள கழனிகளிலிருந்து வரும் வடிகால்களிலிருந்து நேரடியாக சப்ளை பெறுகிறது.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, திருவரங்குளம் காட்டுவாரித் தண்ணீர் வரத்து வாரி வழியே எம்பல் கண்மாய்க்கு பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அவ்விதம் சில சமயங்களில் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. பி. முருகையன் : எம்பல் கண்மாய்க்கு வாரித் தண்ணீர் செல்வதற்கு முடியாமல் அரிப்பு ஏற்பட்டுப் பள்ளம் உண்டாகி இருக்கிறது. அதனால் தண்ணீர் கண்மாயில் செல்லமுடியாத நிலை இருக்கிறது. அதைச் செம்மைப்படுத்தி வாரியின் குறுக்கே "பெட் டாம்" சிறியதாகக் கட்ட வேண்டுமென்று பொறியாளரிட மிருந்து அரசாங்கத்திற்கு ஏதேனும் தகவல் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அப்படிச் செய்தால் கீழே இருக்கும் ஆயக்கட்டுத்தார்களுக்குப் பாதகம் ஏற்படலாம். ஆகையால், கட்டுவது நல்லது அல்ல என்று கலெக்டர் அவர்கள் முடிவு எடுத் திருக்கிறார்கள்.

Procurement of paddy

*366 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) the steps taken for the compulsory procurement of paddy ; and

(*b*) the arrangements made for the distribution of rice to the people in the State?

[9th November 1965

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) & (இ) சபையில் ஒரு விவர அறிக்கை [a] வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : அந்தக் கட்டாய நெல் கொள்முதல் செய்யும்போது, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் நிலம் உள்ளவர்களிடமிருந்துகூட கட்டாயமாகக் கொள்முதல் செய்யப் படுகிறது. அவ்வாறில்லாமல் 5 ஏக்கருக்குமேல் நிலம் வைத்துள்ள வர்களிடமிருந்துதான் கொள்முதல் செய்யவேண்டுமென்று உத்த ரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இதுபோன்ற யோசனை ஒன்றும் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த இராமநாதபுரம் ஜில்லாவில் எப்போதுமே வருஷா வருஷம் நெல் விளைவதில்லை. ஒரு ஆண்டு விளைந்ததை வைத்துக்கொண்டு இரண்டு மூன்று ஆண்டுகள் உப யோகித்து வருகிறார்கள். அவர்களிடம் கட்டாயக் கொள்முதல் செய்தால் சாப்பாட்டிற்குக்கூட இல்லாமல், விளைந்ததையெல்லாம் கொடுத்துவிட வேண்டியிருக்கும். அதைக் கருதியாவது அங்கே கட்டாயக் கொள்முதல் செய்வதை நிறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினருடைய அடுத்த கேள்விக்குப் பதில் சொல்லுகின்ற முறையில் ஸ்டேட்மெண்ட் சபை முன் வைக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் அதைப் பார்த்தால் அவர்கள் சொல்லக்கூடிய 'கட்டாயம்' என்ற வார்த்தைக்கு இடம் இருக்காது. காரணம், நம் மாகாணம் பூராவும் ஏக்கருக்கு இவ் வளவு கொள்முதல் செய்ய வேண்டும் என்று நாம் நிர்ணயம் செய்யவில்லை. விவசாயிகள் விற்கக்கூடிய நெல்லை மார்க்கெட்டில் சர்ப்ளஸ் என்ற அடிப்படையில், நாம் கொள்முதல் செய்கிறோம். ஆகையால் ஒரு ஜில்லாவுக்கு எவ்வளவு வாங்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யவில்லை. அந்த அந்த ஜில்லாக்களில் எவ்வளவு கொள்முதல் செய்ய வேண்டும் என்பதும் அந்தந்த ஜில்லா கலெக்டர் பார்த்துக் கொள்முதல் செய்வார்கள்.

திரு. எஸ். முருகையன் : பருவ மழை தவறி இருக்கிற காரணத் தால் கொள்முதல் செய்வது நிறுத்தப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பருவ மழை தவறியபோதிலும் விளைந்ததில் விவசாயிகள் தேவைக்குப் போக மீதம் இருப்பதை மார்க்கெட்டில் கொண்டு வந்து விற்பார்கள். அதைத்தான் நாம் வாங்குகிறோம்.

திரு. து. ப. அழகமுத்து : ஸ்டேட்மெண்டைப் பார்த்தால் உள்ளூர் நிலைமைகளுக்குத் தகுந்தவாறு கொள்முதல் செய்யலாம் என்ற அதிகாரம் கலெக்டருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ் வளவு நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று சர்க்கார் கலெக் டர்களிடம் சொல்லுகிறார்கள். ஆகையால், அந்த லட்சிய

---

[a] 669–670-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

9th November 1965]

அளவு கொள்முதல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் கலெக்டர்கள் நியாயமற்ற முறையில் கீழ் அதிகாரிகளுக்கு உத்தரவிடுகிறார்கள். அதனால், சிறு நிலக்காரர்கள் கூட, தங்கள் சாப்பாட்டிற்குக் கூட இல்லாமல் எல்லா நெல்லையும் கொடுத்து விட வேண்டியிருக்கிறது. இதை நிவர்த்திக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: அரசாங்கத்தின் கொள்கையைக் கனம் அங்கத்தினர் அவர்கள் சரியாகத் தெரிந்து கொள்ளாததால் மீண்டும் திருப்பிச்சொல்ல விரும்புகிறேன். (மார்க்கெட்டபிள் சர்ப்ளசைத்தான் வாங்கவேண்டும். கிட்டவட்டமாக ராஜ்யம் பூராவும் எவ்வளவு கொள்முதல் செய்யவேண்டும் என்று நிர்ணயம் செய்யவில்லை.) புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு 50 சத விகிதம் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் இருக்கும் என்ற அடிப்படையில் நாம் கொள்முதல் செய்கிறோம். அந்த 50 சத விகிதம் எல்லா ஜில்லாக்களிலும் இருக்கும் என்பது இல்லை. பருவத்திற்குத் தகுந்த முறையில், லோகல் கண்டிஷன்ஸுக்குத் தகுந்த முறையில் இப்பொழுது இருக்கிற சீசனுக்குத் தகுந்த முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கொள்முதல் செய்யப்படும். திருநெல்வேலி மாவட்டத்திலும் குறிப்பிட்ட அளவு வாங்கவேண்டுமென்று விரும்பினோம், நினைத்தோம். ஆனால், பருவநிலையைப் பார்த்து நாம் நம்முடைய அளவைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அதுபோல், இங்கு வைத்திருக்கிற ஸ்டேட்மெண்டைப் பார்த்தால் தெரியும். இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் 6,000 டன் என்று முடிவு செய்தோம். மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் என்ற முறையில் வாங்கக்கூடிய காரணத்தால் அதிருப்தி இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

MR. SPEAKER: I suggest that the Hon. Minister may answer the next question also so that the hon. Members may put there supplementaries on both these questions which relate to the same subject.

*367 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-65-ம் ஆண்டில் அரசாங்கத்தால் கொள்முதல் செய்யப்பட்ட நெல் எத்தனை லட்சம் டன், மாவட்டவாரியாக?

THE HON. SRI V. RAMAIAH: A statement [a] is placed on the table of the House.

திரு. ஆ. சுப்பையா: இந்த நெல் கொள்முதல் சம்பந்தமாக சர்க்கார் விலை நிர்ணயம் செய்யும் சமயத்தில் 57 கிலோ கொண்ட ஒரு மூட்டை 22 அல்லது 22½ ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனால், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கிற ஏஜண்டுகள் 59 கிலோ கொண்ட மூட்டையை 19 ரூபாய்க்குக்

[a] Printed as Appendix II on pages 671–672 infra.